தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 2

2010 ஏப்ரல் 15, வியாழக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை—தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்."

பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைவிடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள்.* வினா *வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

சட்டக் கல்லூரி

***111693—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் அரசு சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஏப்ரல் 15

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் ஒரு வறட்சியான மாவட்டம். இந்தப் பகுதியில் விவசாயத்தை நம்பித்தான் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவ, மாணவிகள் மதுரை, திருச்சி போன்ற சட்டக் கல்லூரிகளில்தான் படிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. அதைப்போல, அழகப்ப செட்டியார் அவர்களுடைய தயவால் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் பொறியியல் கல்லூரி, கலைக் கல்லூரி, பாலிடெக்னிக் போன்ற கல்லூரிகளெல்லாம் அமைக்கப்பட்டு, அவையெல்லாம் ஒன்றிணைக்கப்பட்டு, அழகப்ப செட்டியார் பல்கலைக்கழகம் என்ற பெயரில் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. ஆனால், எங்கள் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி கிடையாது. அந்தப் பகுதி வறட்சியான பகுதியாக இருக்கிறது. ஏழை, எளிய விவசாயப் பெருங்குடி மக்களினுடைய பிள்ளைகள் அதிகளவில் கல்லூரிகளில் படித்து வருகின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளிலுள்ள மாணவ, மாணவிகளினுடைய நலனைக் கருதி, சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை அல்லது காரைக்குடியில் ஏதாவதொரு இடத்தில் ஒரு சட்டக் கல்லூரியை அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே, அழகப்ப செட்டியார் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 400 ஏக்கர் இடம் இருக்கிறது. அதேபோல, மானாமதுரை பகுதியிலேயும் அதிகமான அரசு நிலங்கள் இருக்கின்றன. பஸ் போக்குவரத்தும் இருக்கின்றது, இரயில் போக்குவரத்தும் இருக்கின்றது. ஆகவே, சிவகங்கை மாவட்ட மாணவ, மாணவிகளுடைய நலனைக் கருதி, மானாமதுரை அல்லது காரைக்குடியில் சட்டக் கல்லூரியை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தைப் பற்றியும், குறிப்பாக காரைக்குடியைப் பற்றியும் சொன்னதை நான் மறுக்கவில்லை, ஒத்துக்கொள்கிறேன். ஆனாலும், ஒரு சட்டக் கல்லூரி துவக்குகிற தேவை அங்கு எழவில்லை என்பதுதான் அரசினுடைய கருத்து. காரணம், காரைக்குடிக்கும், மதுரைக்கும் நெடுந்தொலைவு இல்லை. இன்றைக்கு உள்ள நிலைமையில் பஸ்சிலே போனால் ஒன்றரை மணி நேரம்தான் ஆகும். இன்னொரு பக்கம் திருச்சி உள்ளது. அங்கேயும் ஒரு கல்லூரி இருக்கிறது. இவற்றுக்கிடையிலே, மாணவர்கள் காரைக்குடியில் அதிகமாகச் சேருவார்களா என்பது ஐயப்பாட்டுக்குரியதுதான். எனவேதான், அத்தகைய ஒரு கல்லூரியைத் துவக்க வேண்டிய நிலையில் அரசு இல்லை என்பதை விளக்கினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் வறட்சியான ஒரு மாவட்டம். குறிப்பாக, சட்டக் கல்லூரிகளில் சில சமயங்களில் விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதனால், பல நேரங்களில் மாணவர்கள் பல தொந்தரவுகளுக்கு ஆளாகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு சட்டக் கல்லூரியைத் துவக்குகின்ற நேரத்தில், அந்த மாவட்டத்திலுள்ள மாணவ, மாணவிகள் அதே பகுதியில் படிப்பதற்கு ஏதுவாக அமையும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சட்டக் கல்லூரியைத் துவக்குகின்ற நேரத்தில், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவ, மாணவிகள் அங்கேயே படிக்கின்றபொழுது, ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒவ்வொருவரும் சொந்த பந்தமாக இருப்பதால் சட்டக் கல்லூரிகளில் எந்தவிதமான விரும்பத்தகாத நிகழ்வுகளும் நடைபெறாமல் இருப்பதற்கும் ஒரு காரணமாக அமையும். அதைப்போல, சட்டக் கல்லூரி என்றாலே சில நேரங்களில் பிரச்சினையான கல்லூரி என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வருகின்ற

[2010 ஏப்ரல் 15

நேரத்தில், இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒவ்வொரு சட்டக் கல்லூரியை உருவாக்கினால் மாணவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு அந்தப் பகுதியிலே எந்தவிதமான சண்டை சச்சரவுகளும் இல்லாமல் அவர்கள் படிப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதைப்போல, இதுவரை எல்லா கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, கலைக் கல்லூரியாக இருந்தாலும் சரி, பாலிடெக்னிக்காக இருந்தாலும் சரி, அல்லது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குணசேகரன், நீங்கள் கேள்வியின் எல்லைக்குள்ளே வாருங்கள். நீங்கள் பொதுவாகப் பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள். கேள்விக்குள்ளே வாருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

முற்பகல் *9-35*

திரு. ம. குணசேகரன்: எந்தக் கல்லூரியாக இருந்தாலும் சரி, மகளிர் கல்லூரிகள் தனியே அமைக்கப்படுகின்றன. காரைக்குடியிலாவது, மானாமதுரையிலாவது சட்டக் கல்லூரி திறக்கவில்லையென்றாலும், மகளிர் சட்டக் கல்லூரியாவது அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திற்கு ஒரு கல்லூரி அமைப்பதால் மட்டும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் மாறிவிடாது. அது மாணவர்களுடைய மனோநிலையைப் பொறுத்தது. இரண்டாவது, தமிழ்நாட்டிலே அரசாங்கத்தின் சார்பிலே நாம் ஏழு சட்டக் கல்லூரிகளை நடத்துகிறோம். அவற்றிலே படிப்பதற்குப் போதிய இடங்கள் இருக்கின்றன. ஆனால், அவர் கேட்பது, சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் அங்கு இருக்கிற அழகப்பா கல்லூரி, அதனுடைய பின்னணி இவற்றையெல்லாம் நோக்குகிறபோது, அங்கு துவக்கக்கூடாது என்பது அல்ல. துவக்கத் தேவையில்லை என்பதுதான் அரசினுடைய நிலைமை. மாவட்டத்திற்கு ஒரு கல்லூரி ஆரம்பிக்கக்கூடாதா என்று கேட்கிறார். அப்படி ஆரம்பிக்கக்கூடிய நிலை வந்தால், நிச்சயமாக முதல் கல்லூரி காரைக்குடிக்குதான்.

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு கரி. இராம்சாமி.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகரம் வளர்ந்து வருகின்ற நகரம். இந்தப் பகுதி மிக, மிகப் பின்தங்கிய பகுதி. மதுரையிலும் திருச்சியிலும் சட்டக் கல்லூரி இருப்பது எல்லோருக்கும் தெரியும். காரைக்குடியிலிருந்து ஏறக்குறைய 100 கிலோ மீட்டர் தூரத்திலே மதுரை இருக்கிறது. அதேபோல திருச்சி, காரைக்குடியிலிருந்து 120 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. இதற்கிடைப்பட்ட பகுதியைப் பொறுத்தமட்டில் சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சட்டக் கல்லூரி இல்லை. இன்றைக்கு நல்ல பல்கலைக்கழகம் ஒன்று காரைக்குடியிலே இயங்கி வருகிறது. அதேபோல மத்திய அரசுக்குச் சொந்தமான C.E.C.R.I. என்ற கல்வி நிலையம் நல்லமுறையிலே செயல்பட்டு வருகிறது. வளர்ந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையிலே நிச்சயமாக அங்கே ஒரு சட்டக் கல்லூரி தேவை. அதை நமது அரசு அமைத்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியின்மீது மாண்புமிகு உறுப்பினர் வைத்திருக்கிற மரியாதையை நானும் வைத்திருக்கிறேன். பொதுவாகச் சொல்லப்போனால், பின்தங்கிய பகுதியானாலும், அந்த நகரம் ஒரு கல்விக்கூடமாகவே இயங்கி வருகிறது. எல்லாவிதமான கல்வியும் அங்கே கற்பிக்கப்படுகிறது. அதுவே பாராட்டத்தக்க ஒன்று தான். ஆக, இத்தனை கல்வி நிறுவனங்களும் இருக்கிறபோது சட்டக் கல்லூரி மட்டும் இல்லாமல் இருந்தால் நியாயமா என்கின்ற உங்கள் ஏக்கம் எனக்குப் புரிகிறது. வேறு ஒரு கல்லூரி ஆரம்பிக்கிற நிலை உருவானால், முதலில் காரைக்குடியை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டமாகும். அதேபோல கிருஷ்ணகிரி மாவட்டம், தருமபுரி

[2010 ஏப்ரல் 15

மாவட்டம், சேலம் மாவட்டத்தினுடைய மாணவர்கள், சட்டம் பயில வேண்டுமென்றால் அருகிலிலுள்ள பெங்களூருக்குச் சென்று எல்.எல்.பி. படிக்கின்றார்கள். ஒன்று சென்னைக்கு வரவேண்டும். அல்லது சேலம் செல்ல வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, என்னுடைய காவேரிப்பட்டினம் தொகுதியிலே சட்டக் கல்லூரி அமைத்தால் அங்கு இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் மற்றும் பின்தங்கிய மக்கள் எல்லாம் சட்டம் பயில ஏதுவாக இருக்கும். குறிப்பாகச் சொல்லப்போனால், அங்குள்ள மாணவிகள் பிளஸ்-2 உடன் தங்களுடைய கல்வியை முடித்துக்கொள்கிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரியை அமைத்தால் அவர்கள் அங்கே சென்று படிப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே, அங்கு ஒரு சட்டக் கல்லூரியை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினருடைய ஆதங்கம் எனக்குப் புரிகிறது. இருந்தாலும் அவர் சொன்னதைப்போல் உங்கள் ஊரிலே உள்ள பெரும்பாலான மாணவர்கள் பெங்களூருக்குப் போய் விடுகின்றார்கள். தனியார் சட்டக் கல்லூரி ஒன்று சேலத்தில் இருக்கிறது. தருமபுரியிலே தடுக்கிவிழுந்தால் அடுத்தது சேலம்தான். கொஞ்சம் கீழே இறங்கி வந்தால் வேறு ஒரு சட்டக் கல்லூரி இருக்கிறது. இப்படியிருக்கும்போதே மாணவர்கள் போதிய அளவுக்கு வரவில்லை. எனவே, மீண்டும் அங்கே ஒரு கல்லூரி தொடங்கினால் இருக்கிற கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். கலைக் கல்லூரிக்கோ, பொறியியல் கல்லூரிக்கோ வருகிற அளவுக்கு சட்டக் கல்லூரிக்கு மாணவர்கள் வரமாட்டார்கள். குறிப்பிட்ட அளவுக்குத்தான் வருவார்கள். தற்போதைய சூழ்நிலையில் வேறு சட்டக் கல்லூரி துவக்கக்கூடாது என்பது அரசின் முடிவு அல்ல. ஆனால், இவற்றை எல்லாம் கணக்கில் கொண்டுதான் இப்பொழுது தேவையில்லை என்று அரசு கருதுகிறது. அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.